OS NO.215/2010
Date:03.03.2020
Pw1(Cross continuation)
Name:Gokulrao
Address:

2முதல் 4ம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1சாட்சியின்மீண்டும் குறுக்கு விசாரணை=

**வழக்கு சொத்துக்களில் என் தந்தையார் வழி பாட்டி சந்திரகாந்தாவிற்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளனவா என்றால் தவறு. கூட்டு குடும்ப சொத்துக்கள் எவ்வளவு இருக்கும் என்று சொன்னால் தெரியாது. கூட்டு குடும்ப சொத்துக்கள் எவ்வளவு என்று தெரியாத போது பதிலுரையில் 29.1.1962ல் கூட்டு குடும்ப வருமானத்திலிருந்து வாங்கப்பட்டது என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் தேதி சந்தேகமாக உள்ளது, கூட்டு குடும்ப சொத்தை சில வெளிநபர்களும், வாதிகளின் குடும்ப நபர்களும் சேர்ந்து விற்றுள்ளார்கள், என்பதால் என்னால் இயன்ற வரை ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளேன், மொத்த சொத்து கணக்கு எனக்கு தெரியாது. நிலங்கள் நன்செய்யா, அல்லது புன்செய்யா என்றால் இரண்டும் உள்ளன. எவ்வளவு நன்செய் மற்றும் புன்செய் நிலங்கள் என்றால் சுமாராக 4ஏக்கர், 30செண்டு என்று தான் வாதி குறிப்பிட்டுள்ளார், எவ்வளவு நன்செய் மற்றும் புன்செய் என்று ஆவணங்கள் பார்த்தால் தான் தெரியும். மேற்படி நிலங்களிலிருந்து வந்த மிகுதி வருமானம் எவ்வளவு என்றால் தண்ணீர் பற்றாக்குரை காரணத்தினால் மிகுதி வருமானம் இல்லை, என் அப்பாவின் தனிபட்ட வருமானத்தை வைத்தும் செலவு செய்துள்ளார். என் தந்தையார் உயிருடன் இருந்த போது செலவு செய்ததற்கு 2முதல் 4பிரதிவாதிகளின் தகப்பனாரான இறந்து போன' மதனகோபாலிடம் எழுத்துப்பூர்வமான அனுமதி எதுவும் பெற்றோமா என்றால் வாய்மொழியாக அனுமதி பெற்றோம். மதனகோபால் இறந்து போனஉடன் அவரின் வாரிசுகளிடம் எழுத்துப் பூர்வமான அனுமதி எதுவும் பெற்றேனா என்றால் அனுமதி வாய்மொழியாகதான் வாங்கினேன். எழுத்துப்பூர்வமான அனுமதி எதுவும் பெற்றேனா என்றால் வாய்மொழியாக பெற்றோம், 2முதல் 4பிரதிவாதிகள் விட்டு விட்டு சென்று விட்டார்கள், இருந்தாலும் 1ம் பிரதிவாதி மணிஆர்டர் மூலம் பணம் அனுப்பியுள்ளார். விடுதலை பத்திரம் சென்னை வீட்டிற்கு மட்டும் தான் பெறப்பட்டது என்றால் விடுதலை பத்திரமே கிடையாது, 2முதல் 4பிரதிவாதிகள் பாகப்பிரிவினை செய்து விடுதலை செய்துள்ளார்கள். விடுதலை பத்திரத்தில் ஊத்துக்காட்டில் உள்ள விவசாய நிலங்கள்**

சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் பாகப்பிரிவினை விடுதலை பத்திரத்தில் விவசாய நிலங்கள் சேர்க்கப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.41 பத்திரத்தில் கண்ட வீடு ஆதியில் எத்திராஜுலு பெயரில் உள்ளது என்றால் ஆதியில் எத்திராஜுலு நாயுடுக்கு பாத்தியப்பட்டது, பிறகு 1ம் பிரதிவாதிக்கும், மதனகோபாலுக்கும் பாத்தியப்பட்டு, பிறகு 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது. எத்திராஜுலு நாயுடு உயில் அல்லது செட்டில்மெண்டு எதுவும் எழுதி வைத்தாரா என்றால் எதுவும் எழுதி வைக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.42 ஆன கடன் பத்திரத்தில் கண்ட ரூ.2,50,000/- பணத்தை எதற்காக 2முதல் 4பிரதிவாதிகள் கடன் வாங்கினார்கள் என்றால் திருமண செலவிற்காகவும், இதர செலவிற்காகவும் என்று கூறி வாங்கினார்கள், ஆவணத்திலும் உள்ளது. விவசாய நிலத்திற்காக செலவு செய்த தொகையில் எங்களது (2முதல் 4பிரதிவாதிகளின்) விகிதாசார பங்கை பி.வா.சா.ஆ.42 ஆன கடன் பத்திரத்தில் ஏன் சேர்க்கவில்லை என்று சொன்னால் ஏற்கனவே நிறைய 2முதல் 4பிரதிவாதிகளுக்கு அவர்களது தேவைகளுக்கு உண்டான பணத்தை 1ம் பிரதிவாதி கொடுத்துள்ளார், மேற்படி ஆவணம் கடன் பத்திரம் என்பதால் எழுதவில்லை.

(2முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.)